**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் திங்கட்கிழமை**

O.S. 104/2024

வாதி தரப்பு சாட்சியாகிய PW2-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலிங்கம் | தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| த/பெ | : | கண்ணுசாமி | கிராமம் | : | கமலாபுரம் |
| ஜாதி | : | | தொழில் | : | விவசாயம் |
| சமயம் | : | | வயது | : | 67/25 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. வாதி தரப்பில் என் சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எனக்கு என்ன தொழில் என்றால் ஆரம்பத்தில் கமலாபுரம் கிராம பணியாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விவசாயம் பார்த்து வருகிறேன். தாவா சொத்து விஸ்திரணம் தெரியுமா என்றால் 4 3/4 சென்ட் விஸ்திரணம் ஆகும். தாவா புலஎண் 99/10A -ன் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 9 1/2 சென்ட் விஸ்திரணம் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபன வாக்குமூலத்தில் தாவா சொத்தின் நான்கெல்லை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து

யாருக்கு சொந்தமான சொத்து என்றால் கணபதியாபிள்ளை வாங்கிய சொத்து ஆகும். கணபதியாபிள்ளை யாரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றார்கள் என்று சொல்கிறேன் என்றால் கோதண்டபானி - குஞ்சம்மாள் ஆகியோரின் வாரிசு முருகையபிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். மேற்படி கணபதியாபிள்ளை கிரயம் பெற்றதாக சொல்கின்ற கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து தொடர்பான வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் மீனியலாக பணிபுரிந்து வந்திருப்பதால் எனக்கு கமலாபுரம் கிராமத்தில் உள்ள மொத்த நஞ்சை புஞ்சை விபரங்கள் தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். தற்போது சரியாக நினைவில்லை. தாவா சொத்து கணபதியாபிள்ளை கிரயம் பெற்றதாக நான் வழக்கிற்காக வாதி கேட்டுகொண்டதால் நான் பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தாவா சொத்து குறித்து விபரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் முன்விசாரணையில் தாவா சொத்து வாதி அனுபவத்தில் இருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1முதல் 4 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதி அலுவலகதில் தாவா சொத்து தொடர்பாக ஏற்படுத்திய பதிவு ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி கேட்டுகொண்டதற்காக பெய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.10.13 17:12:12 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் திங்கட்கிழமை**

O.S. 104/2024

வாதி தரப்பு சாட்சியாகிய PW3-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| த/பெ | : | கோவிந்தராஜ் | கிராமம் | : | மூலங்குடி |
| ஜாதி | : | | தொழில் | : | ஓட்டுநர் |
| சமயம் | : | | வயது | : | 51/25 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல. வாதி தரப்பில் என் சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நீதிமன்றம் மூலமாக எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றாலும் வாதி சாட்சி சொல்ல அழைத்ததன் பெயரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றாலும் சரிதான். நான் வசித்து வருவது மூலங்குடி கிராமம் என்றாலும் தாவா சொத்துகள் கமலாபுரம் கிராமத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரிதான். தாவா சொத்துகள் யாரால் கிரயம் பெறபட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துகள் தொடர்பாக ஆவணங்கள் எதையும் நான்

பார்த்தது இல்லை என்றால் சரிதான். நானும் வாதியும் ஒரே தெருவில் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்துவருவதாக அவர் கேட்டுகொண்டதற்க்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1முதல் 4 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதி அலுவலகதில் தாவா சொத்து தொடர்பாக ஏற்படுத்திய பதிவு ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி கேட்டுகொண்டதற்காக பெய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//